ஏற்றிக்கொள்கிறார்கள். அப்போது எல்லாம் அதனுடைய ஆயுட்காலம் குறைந்து போவது இல்லையா? ஆகவே மூன்று பேர்கள் என்பதற்கு நான்கு பேர்களை ஏற்றிக்கொள்வதனால் அதன் ஆயுட்காலம் ஒன்றும் குறைந்து விடாது என்பதை அரசினர் உணர்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதைச் சிந்திக்க வேண்டியவர் திரு. விநாயகம் அவர்கள்.

திரு. நா. காசிராமன் : சர்க்கார் சொல்கிற பிரகாரம் இந்த டாக்சிகளில் நான்கு பேர்களை ஏற்றிக்கொள்வதற்கு அவர்கள் சம்மதித்தால் இப்போதுள்ள வரி விகிதத்தை, நான்குபேர்கள் ஏற்றப்படுகிறார்கள் என்பதற்காக இந்த அரசு அதிகப்படுத்தாமல் இருக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்குமேல் போட இப்போது உத்தேசம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : டாக்சியில் நான்கு பேர்கள் ஏற்றிக்கொள்வது என்பது ஒரு விஷயம். இதற்கு முன் இருந்த அரசு ஆட்டோ ரிக்ஷாக்களை கட்டுப்படுத்திற்று. அந்தக் கட்டுப்பாட்டை தளர்த்த இந்த அமைச்சரவை முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆட்டோ ரிக்ஷாக்களைப் பொறுத்த வரையில் பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. போலீஸ் தரப்பினர் அபிப்பிராயம் ஒரு வகையில் இருக்கிறது. இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் தெரிவிக்கிற அபிப்பிராயம் வேறாக இருக்கிறது. இவைகளைப் பற்றி இந்த அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. கே. விநாயகம் : ஒரு வேளை பேபி டாக்சியில் நான்கு பேர்கள் போகலாம் என்ற உத்தரவு வருகிறது என்று வைத்துக்கொண்டால் இப்போதுள்ள மீடர் ரேட்டை உயர்த்தாமல் பார்த்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு அங்கத்தினர் யோசனை யோசிக்கப்படும்.

Madras-Arkonam Railway line

* 403 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the stage at which the electrification of Madras-Arkonam railway line stands ; and

(*b*) the steps taken by the State Government to hasten this scheme with Central Government ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) சென்னை-திருவள்ளூர் பிரிவுக்கு மின்சார இரயில் பாதை போடும் திட்டத்தையும் டீசல் ரயில் வண்டிகளை விடும் திட்டத்தையும் ஒப்பிட்டுப்பார்த்து ஆய்வு செய்யும் வேலையை இந்திய அரசின் ரயில்வே அமைச்சு மேற்கொண்டுள்ளது.

(இ) சென்னை-அரக்கோணம் மின்சார ரயில் பாதை போடும் திட்டத்துக்கு நான்காவது திட்டத்தில் முதலிடம் அளிக்கும்படி மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தி வந்துள்ளது.

திரு. கே. விநாயகம் : சென்னையிலிருந்து அரக்கோணம் வரையிலும் மின்சார ரயில் போடுவதைப்பற்றி ஆராய்ந்து கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இது எத்தனை ஆண்டுகளுக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? இதை எப்பொழுது துவக்குவதாக இருக்கிறார்கள் ? நமது ஆட்சிக் காலத்திலேயே முடியும் என்று நினைக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1957-ம் ஆண்டு ஜூன் மாதத்தி லிருந்தே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தத் தொடங்கியிருக்கிறது, வற்புறுத்திக்கொண்டே வரு கிறது, இந்த அரசும் வற்புறுத்தும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த மின்சார ரயில் பாதை நீண்ட நாட்களாகவே பேசப்பட்டு இன்னும் நிறைவேற்றப்படாமல இருக்கிறது. எழுச்சி நாளிலே இதையும் சேர்த்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்து மத்திய அரசோடு போராடுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார் களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எழுச்சி நாளன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதையும் மனதிலே நினைத்துக்கொள்ளலாம்.

DR. H. V. HANDE : This question of electrification of the Madras-Arkonam Railway line has been hanging fire for the last one decade. Apart from the fact that it costs some money, have the Central Government given any other specific reasons for postponing this scheme from the Second Five-Year Plan to the Third and Fourth Five-Year Plan, which may even be postponed to the fifth five year plan ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் எந்தக் காரணமும் சொல்லவில்லை, பரிசீலித்து வருகிறோம், பரிசீலித்து வருகிறோம் என்ற காரணத்தைத் தவிர.

THIRU R. PONNAPPA NADAR : Has the State Government fixed any priority list for the other railway lines ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்னை-அரக்கோணம், சென்னை-கும்மிடிப்பூண்டி லைன்களில் மினசார ரயில்கள் விட ஏற்பாடுகள் செய்தல்.

சேலத்திலிருந்து கரூர் வழியாக திண்டுக்கல்லுக்கு பிராட்கேஜ் ரயில் பாதை ஒன்றைப் புதிதாக அமைத்தல், திண்டுக்கல்லிலிருந்து மதுரை வழி யாகத் தூத்துக்குடி செல்லும் ரயில் பாதையை பிராட்கேஜ் ரயில் பாதை யாக மாற்றுதல்; இதில் மணியாச்சியிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்கிற இணைப்பும் அடங்கும்.

திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவில் வழியாகத் திருவனந்த புரத்திற்கு (நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரிக்கு ஒரு கிளைப்பாதையுடன்) புதிய ரயில் பாதை ஒன்றை அமைத்தல்.

திருச்சிராப்பள்ளிக்கும் விழுப்புரத்திற்கும் இடையில் உள்ள கார்டு லைனை பிராட்கேஜ் லைனாக மாற்றியமைத்தல்; விழுப்புரத்திலிருந்து செங்கற்பட்டிற்கு கூடுதலாக பிராட்கேஜ் லைன் ஒன்றை அமைத்தல், அரக்கோணத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையே உள்ள ரயில் பாதையை பிராட்கேஜ் பாதையாக மாற்றியமைத்தல்.

இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

Salary of Ministers

* 389 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the members of the Cabinet including the Hon. Chief Minister have decided not to draw any salary or allowances, etc ; and